ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ வெள்ளைச் சுரிசங்கு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ வெள்ளைச் சுரிசங்கு ‖

தாய்மாரும் தோழிமாரும் உற்றாரும் தடுக்கவும் தலைவி
திருப்பேரெயில் சேரத் துணிதல்

‡வெள்ளைச் சுரி சங்கொடாழி ஏந்தித்⋆
    தாமரைக் கண்ணன் என் நெஞ்சினூடே⋆
புள்ளைக் கடாகின்ற வாற்றைக் காணீர்⋆
    என் சொல்லிச் சொல்லுகேன் அன்னைமீர்காள்⋆
வெள்ளச் சுகம் அவன் வீற்றிருந்த⋆
    வேத ஒலியும் விழா ஒலியும்⋆
பிள்ளைக் குழா விளையாட்டொலியும்
    அறாத்⋆ திருப்பேரையில் சேர்வன் நானே (1)

நானக் கருங்குழல் தோழிமீர்காள்!⋆
    அன்னையர்காள்! அயல் சேரியீர்காள்⋆
நான் இத்தனி நெஞ்சம் காக்க மாட்டேன்⋆
    என் வசம் அன்றிதிராப்பகல் போய்⋆
தேன் மொய்த்த பூம் பொழில் தண் பணை சூழ்⋆
    தென் திருப்பேரையில் வீற்றிருந்த⋆
வானப் பிரான் மணிவண்ணன் கண்ணன்⋆
    செங்கனி வாயின் திறத்ததுவே (2)

செங்கனி வாயின் திறத்ததாயும்⋆
    செஞ்சுடர் நீள் முடித் தாழ்ந்ததாயும்⋆
சங்கொடு சக்கரம் கண்டுகந்தும்⋆
    தாமரைக் கண்களுக்கற்றுத் தீர்ந்தும்⋆
திங்களும் நாளும் விழாவறாத⋆
    தென் திருப்பேரையில் வீற்றிருந்த⋆
நங்கள் பிரானுக்கென் நெஞ்சம் தோழி!⋆
    நாணும் நிறையும் இழந்ததுவ்வே (3)

www.prapatti.com

இழந்த எம்மாமை திறத்துப் போன⋆
என் நெஞ்சினாரும் அங்கே ஒழிந்தார்⋆
உழந்தினி யாரைக் கொண்டென் உசாகோ⋆
ஓதக் கடல் ஒலி போல⋆ எங்கும்
எழுந்த நல் வேதத்தொலி நின்றோங்கு⋆
தென் திருப்பேரையில் வீற்றிருந்த⋆
முழங்கு சங்கக் கையன் மாயத் தாழ்ந்தேன்⋆
அன்னையர்காள்! என்னை என் முனிந்தே (4)

முனிந்து சகடம் உதைத்து மாயப்
பேய் முலையுண்டு⋆ மருதிடை போய்⋆
கனிந்த விளவுக்கு கன்றெறிந்த⋆
கண்ண பிரானுக்கென் பெண்மை தோற்றேன்⋆
முனிந்தினி என் செய்தீர் அன்னைமீர்காள்⋆
முன்னியவன் வந்து வீற்றிருந்த⋆
கனிந்த பொழில் திருப்பேரையிற்கே⋆
காலம் பெறவென்னைக் காட்டுமின்னே (5)

காலம் பெறவென்னைக் காட்டுமின்கள்⋆
காதல் கடலின் மிகப் பெரிதால்⋆
நீல முகில் வண்ணத்தெம் பெருமான்⋆
நிற்கும் முன்னே வந்தென் கைக்கும் எய்தான்⋆
ஞாலத்தவன் வந்து வீற்றிருந்த⋆
நான்மறையாளரும் வேள்வி ஓவா⋆
கோலச் செந்நெற்கள் கவரி வீசும்⋆
கூடு புனல் திருப்பேரையிற்கே (6)

பேர் எயில் சூழ் கடல் தென் இலங்கை செற்ற⋆
பிரான் வந்து வீற்றிருந்த⋆
பேரையிற்கே புக்கென் நெஞ்சம் நாடிப்⋆
பேர்த்து வரவெங்கும் காண மாட்டேன்⋆
ஆரை இனியிங்குடையம் தோழி!⋆
என் நெஞ்சம் கூவ வல்லாரும் இல்லை⋆

www.prapatti.com

ஆரை இனிக்கொண்டென் சாதிக்கின்றது⋆
என் நெஞ்சம் கண்டதுவே கண்டேனே (7)

கண்டதுவே கொண்டெல்லாரும் கூடிக்⋆
கார்க்கடல் வண்ணனோடென்திறத்துக்
கொண்டு⋆ அலர் தூற்றிற்றது முதலாக்⋆
கொண்டவென் காதல் உரைக்கில் தோழி⋆
மண் திணி ஞாலமும் ஏழ் கடலும்⋆
நீள் விசும்பும் கழியப் பெரிதால்⋆
தெண் திரை சூழ்ந்தவன் வீற்றிருந்த⋆
தென் திருப்பேரையில் சேர்வன் சென்றே (8)

சேர்வன் சென்றென்னுடைத் தோழிமீர்காள்!⋆
அன்னையர்காள்! என்னைத் தேற்ற வேண்டா⋆
நீர்கள் உரைக்கின்றதென் இதற்கு⋆
நெஞ்சும் நிறைவும் எனக்கிங்கில்லை⋆
கார்வண்ணன் கார்க் கடல் ஞாலம் உண்ட⋆
கண்ண பிரான் வந்து வீற்றிருந்த⋆
ஏர் வள ஒண் கழனிப் பழனத்⋆
தென் திருப்பேரையின் மாநகரே (9)

நகரமும் நாடும் பிறவும் தேர்வேன்⋆
நாண் எனக்கில்லை என் தோழி மீர்காள்⋆
சிகரம் அணி நெடு மாட நீடு⋆
தென் திருப்பேரையில் வீற்றிருந்த⋆
மகர நெடுங்குழைக் காதன் மாயன்⋆
நூற்றுவரை அன்று மங்க நூற்ற⋆
நிகரில் முகில்வண்ணன் நேமியான்⋆
என் நெஞ்சம் கவர்ந்தெனை ஊழியானே (10)

‡ஊழிதோறூழி உருவும் பேரும்
செய்கையும்⋆ வேறவன் வையங்காக்கும்⋆
ஆழி நீர் வண்ணனை அச்சுதனை⋆
அணி குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆

கேழில் அந்தாதி ஓராயிரத்துள்
    இவை⋆ திருப்பேரையில் மேய பத்தும்⋆
ஆழி அங்கையனை ஏத்த வல்லார் அவர்⋆
    அடிமைத் திறத்தாழியாரே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com